PR/2019/**


# Embassy of Japan

No. 20, Srimath R. G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
TEL:94-11-269-3831~3, FAX : 94-11-269-8629
E-mail: cultujpn@sltnet.lk


September 18, 2019

PRESS RELEASE

**இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த ஜப்பானிடமிருந்து 2 மில். அமெ. டொ. நன்கொடை உதவி**

இலங்கையில் சமாதானத்தை எய்தவும் நிலைத்திருக்கச் செய்யவும் பாலின சமத்துவம், பெண்களுக்கு வலுவூட்டல் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் போன்றவற்றில் நேர்த்தியான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலமைந்த "இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தல்" திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஜப்பான் சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியிருந்தது. பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அமைப்பினூடாக இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்கான உடன்படிக்கை பரிமாறும் நிகழ்வு செப்டெம்பர் 18 ஆம் திகதி, ஜப்பானிய தூதுவரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான ஐக்கிய நாடுகள் பெண்கள் பிராந்திய பணிப்பாளர் மொஹமட் நசிரி, பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் உலர் வலயங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தர்ஷனா சேனாநாக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண்கள் பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகள், பெண்கள் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் பெண்களை அரசியலில் ஈடுபட ஊக்குவித்தல் போன்ற இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இந்த நிதி உதவி பயன்படுத்தப்படும்.

G7 பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு (WPS) பங்காண்மை செயற்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஜப்பான் வழங்கும் உதவிகளின் ஒரு அங்கமாக இது அமைந்துள்ளது. 2018 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற G7 வெளிநாட்டு அமைச்சர்களின் சந்திப்பின் போது இதற்கான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதற்கான ஜப்பானின் பங்காளர் நாடாக இலங்கை திகழ்கின்றது. இலங்கை அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்க ஏனைய G7 அங்கத்தவ நாடுகளுடன் இணைந்து செயலாற்ற ஜப்பான் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

(###)

***********************************************************

Please contact the Economic and Development Cooperation Section for further information.
Tel: 011-269-3831~3 (ext.226)